உ

சிவமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

ஸ்ரீ உமாமஹேஸ்வரியார்க்கு ஸ்ரீ உமாமஹேஸ்வரர்

உபதேசித்தருளிய

# புட்பபந்தம்.

இது

பறங்கிப்பேட்டை

வித்துவானும் பென்ஷன் ஓவர்சீயருமாகிய,

ஸ்ரீமத். ப. அ இலட்சுமணப் பிள்ளையவர்களால்

ஸமஸ்கிருதத்தினின்றும் மொழிபெயர்க்கப் பெற்று,

மேற்படியூர்

சு. எ. குமாரஸ்வாமி யாசாரியாலும்

ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளையாலும்

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1913.

[காப்பிரைட் ரிஜிஸ்டேர்ட்)

திருச்சிற்றம்பலம்.

# புட்பபந்தம்.

## முகவுரை.

அகளமாய் ஆரும் அறிதற்கரிய இறைவன் எத்திறவுயிரும் இன்பம் எய்துவான் திருவாய்மலர்ந்தருளிய நூல் வேதம். அது ஆறங்கங்களை யுடையது. அவையாவன:— சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி. இவற்றுள் சோதிடம் வைதிக கிரியைகளுக்குக் காலம் அறிவிப்பது. அன்றியும் கணிதம், பாவம், ஆரூடம் எனும் முப்பகுதியினையும் உடையது. பாவ (ஹாவ)ப் பகுதியோ இராசிகளில் கிரகங்கள் சஞ்சரித்தலினால், இடையறாது உடலோடு கூடி உயிர்கள் வழங்குதற்கும் அறம் பொருள் இன்பங்கள் பயன்படற்கும் கருவியாம் மழைவளம் முதலியவற்றைத் தெரிவிப்பது. மழைவளம் இல்லையேல் உலகம் நடைபெறற்கு இயலாது. எப்புருடார்த்தமும் பெற ஒல்லாது. இவ்வுலகமே அன்றி வேறுள உலகமும் பொலிவது மழை வளங் கொண்டே.

"சுடர்சினந், தணியப்
பயங்கெழு வெள்ளி யாகிய நிற்ப
விசும்புமெய், யகலப் பெயல்புர வெதிர"
"மாரியுமுண்டிவண் டுலகு புரப்பதுவே"
"வரையா மரபின் மாரி"
"மாரி யன்ன வண்மை"
"வீழ் புனலாவது நாறும் அர்ச்சனை நல் வுறுப்பு"

என்று விளக்கினர் ஆன்றோர் மழைவளனை.

இன்ன மழைவளம் இக்காலம் இவ்வளவிற்று இவ்விடம் இவ் வளவிற்று என வரையறுத்துணரின் வேண்டும் நன்மை பெறல் கூடும். வேண்டாதன ஒதுக்குதலுங்கூடும். இன்னதனை இங்ஙன் செய்து முடிப்பம் எனத் துணிதலும் வாய்க்கும். இதனை யுணர்த் தற்குத் தக்க நூலொன்றும் நமது செந்தமிழில் வெளிவந்திலது. இக்குறையினைப் போக்கவும் இக்காலம் இவ்விடம் இவ்வளவினது மழை என்றுணர்தலின் தீயன ஒதுக்கி நல்லன பெறவும் வெளிவந்த நூல் இப்புட்பபந்தமே. இது வடமொழியில் இறையனுர் இறை வியார்க்கு உலகுபகாரங் கருதிச் செவியறுவுறுத்திய செவ்விய நூலின் மொழிப்பெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பான் புகுந்தார் பறங்கிப்பேட்டை செந்தமிழ்ச்செல்வ ஸ்ரீமாந். ப. அ. இலட்சுமண பிள்ளையவர்கள். இந்நூற் பொருளை உணர்த்தலால் உலகினர் பல ரும் தவிர்காரியஞ் சாராது தக்க காரியம் சார்ந்து சுகித்தலே தந்ந லம் எனக்கருதும் பறங்கிப்பேட்டை ஸ்ரீமாந். சு. ஏ. குமாரஸ்வாமி யாசாரியாரவர்கள் வெளிப்படுத்தும் பாக்யமுடையார். திதியின் கால அளவு, நாளின் கால அளவு, திதிநாள்களின் கூட்டரவு, காற் றுக்குறி, இடிக்குறி, மின்னற்குறி, கிரகசேர்க்கை, இவை முதலிய குறிப்பான் மழையினது இன்மை, உண்மை அளவு முதலியன தெ ரிந்து நலனுறுத்தும் இந்நூலை மொழிப்பெயர்த்தும் வெளிப்படுத் தியும் உபகரித்தார்க்கு இவ்வுலகம் பெரிதுங் கடப்பாடுடையது.

வாழிய புட்பபந்தம் வாழி மொழி பெயர்த்தார்
வாழி வெளிப்படுத்தும் வண்மையினர்—வாழியவே
இந்நூற் பொருளுணரு மேற்றச் சவியினரும்
முன்னான்கு தோளனருண் மொண்டு.

இங்ஙனம்,

பரிதாபிஹூ ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள்.
மகரரவி' ஙூமீவ.. சந்நிதிவீதி, திருப்பாதிரிப்புலியூர்.

# CERTIFICATES.

It is with great pleasure I perused the work named "Putpabantham" found in the "Sen Tamil Patrika a monthly journal issued by Madura Tamil Sangam.

The work is a very valuable guide to the Astrologer and the public is as much as it gives out the quantity of rain which will be had through the influence of Stars.

The very fact that the work is published by the Sangam clearly testifies its usefulness and value to the world at large.

Porto-Novo<br>
20—11—12.

(Sd.) SRIRANGACHRIAR,<br>
1st., Assistant,<br>
*Board Secondary School.*

"Putpabandam" an article found in the monthly Magazine of the "Sen Tamil Sangam" appears to be very useful especially to agriculturist as it gives out in plain ——Tamil how the climatic changes are brought about by the influence of the several Nakshatrams and their grahams.

This is one of the diamond works of the kind and deserves to be read and grasped by all.

Porto-Novo,<br>
23—11—12.

(Sd). Y. A. SWAMINADHA AIYAR,<br>
*(Ag.) Sub-Registrar.*

I read in the monthly journal of the Sen Tamil Sangam, an article " Putpabantam ".

It seems to be very useful to astrologers, as it is very plainly written in Tamil about the climatic change brought on by the influence of Several stars.

This is one of the best works and deserves to be read by all.

Porto-Novo
26—11—12.

(Sd.) T. KUPPUSAMI PILLAI,
*Senior grade Sub-Assistant Surgeon.*

# * புட்பபந்தம்.

### வெண்பா.

" செவ்வி திகழ்பொருட்டுச் செந்தா மரைவதனக்
கொவ்வையெழிற் செவ்வாய்க் குறத்தேனை—நவ்வி
விழியானை யைப்புணரும் வேளைமத வெள்ளம்
பொழியானை யைமனமே போற்று."

### குறள் வெண்செந்துறை.

" தவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே."

---

ஸ்ரீதேவதேவனான ஸ்ரீசோமசுந்தரக் கடவுட்குரிய திருக்கார்த்திகைமீ பௌர்ணமியன்று கார்த்திகை பூரணமாயிருந்தால் அவ்வாண்டின் ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகையாகிய இந்நான்கு மாதங்கள் வரை மழை நன்கு வருஷித்து சுபிக்ஷம் க்ஷேமம் ஆரோக்கியம் முதலியன வுண்டாக்கிப் பயிர்பலிதமாக்கும்.

கார்த்திகை மாதப் பௌர்ணமியில் பரணியுங் கார்த்திகையுங் கலந்துவரின், அதிவெப்பமும் அநாவிருஷ்டியும் கண்ட வருஷமும் அவ்வாண்டி லுண்டாகும்.

கார்த்திகைப் பௌர்ணமியில் அஸ்வினி பரணி கார்த்திகை இவை கலந்திருந்தால், சிங்கரவிமுதல் விருச்சிகரவி வரை மத்திய விருஷ்டியாம்.

---

* இந்நூல் வடமொழியிலுள்ளது. இஃது உமாமகேச்வரர் ஸ்ரீ உமாமகேச்வரியார்க்கு உபதேசித்தருளியது. இது மாதம் திதி நக்ஷத்திரம் யோகங்களின் கூட்டுறவால் உண்டாகும் மழையின் அளவைக் கூறுவது இத்தகைய நூல் தமிழ்ப்பாஷை அறிந்தார்க்கும் உபயோகமாகும் வண்ணம் பறங்கிப்பேட்டை சு. எ. குமாரசுவாமி யாசாரியாரால் வெளியிடலாயிற்று

கார்த்திகைப் பூர்ணமையில் உரோகிணிவரின், கால், நடைகட்கும் மனிதர்கட்கும் பயமுண்டு.

கார்த்திகைப் பௌர்ணிமையில் கார்த்திகாதி நக்ஷத்திரங்கள் சம்பாதமாயின் சொற்பமழையு மற்பவிளைவுமுண்டு. [சமபாதமென்பது கார்த்திகை பின்இரண்டுபாதமும் உரோகிணி முன் இரண்டு பாதமுஞ் சேர்ந்து வருதல்]

பரணி கார்த்திகையோடு கலந்தும், கார்த்திகை உரோகிணியோடு கலந்தும் வரும் வருஷங்களில், தேசத்தில் உற்பாதங்களும் அரசர்களுள் யுத்தமும் மனிதர்களுள் பரஸ்பரங் கலகமுமுண்டாகும்.

கார்த்திகைமீ பௌர்ணமி திதி 60 நாழிகையும், கார்த்திகை நக்ஷத்திரம் 60 நாழிகையும் இருப்பின், கடகரவிமுதல் துலாரவி வரை நன்மழை பொழியும்.

பூராடத்தில் சூரியப்ரவேசமுதல் மிருகசீரிடம் வரை கர்ப்போட்டமெனப. பூராடத்தில் சூரியப்ரவேசமுதல் 14 நாழிகை வரை * வருஷதாதுக்கள் தோன்றின், திருவாதிரையிற் சூரியப்ரவேசமுதல் நன்மழையுண்டு.

பூராடத்தில் சூரியப்ரவேச முதல் 14 நாழிகை வரை மின்னல் இடி மழை நீர்த்தாரை அதிகக்குளிர் அதியுஷ்ணம் காற்று பரிவேடம் இந்திரவில் இவை முதலிய குறிகளுள் ஏதேனு மொன்றைக்காணின், சூரியன் திருவாதிரையிற் பிரவேசிக்கிற ஆனிமீ முதல் நல்ல மழையென அறியலாம்.

தநுசில் இரவி வரும்போது மூலநாளில் வருஷதாதுக்கள் தோன்றின், அந்நாள் முதல் 105 நாள் வரை மழையுண்டு.

தநுசில் ஆதித்தன் வரும்போது பூராடத்தில் வருஷதாதுக்கள் தோன்றின், அவர் புனர்பூசத்தில் வருங்காலை மழையுண்டு. மூல

* வருஷதாதுக்கள் என்பன:—மேகம், மின்னல், இடி, நீர்க்கால், குளிர்ச்சி, அதியுஷ்ணம், காற்று, மழை தூற்றல், (சிறுமழைத்தாரை) பரிவேடம், இந்திரதநுசு ஆகிய இவைகளே.

மூதல் 13 நக்ஷத்திரங்களில் வர்ஷநாதுக்கள் தோன்றின் திருவாதிரைமுதல் 13 நக்ஷத்திரங்கள் வரை மழையுண்டு. அஃதாவது மூலத்தில் இரவியிருக்கையில் கர்ப்போட்டமிருந்தால், திருவாதிரையில் வரும்போது மழையுண்டு. பூராடத்தில் இரவியிருக்கும்போது கர்ப்போட்டமிருந்தால் புநர்பூசத்திற்கு அவர் வரும்போது மழையுண்டு. மற்றவைகட்கு மிவ்வகையே கொள்க.

இரவி மேடத்தில் வரும்போது அசுவதியில் மழை பெய்தால், மூலத்தில் அவர் வரும்போது மழையுண்டு கர்ப்போட்டங்கெட்டு இரவி திருவாதிரையில் வரும்போது மழையில்லை.

சித்திரை மாதத்தில் மிருகசீரிடத்தில் மழைபெய்யின், அவிட்டத்தில் இரவி வரும்போது மழையுண்டாகும். கர்ப்போட்டங் கெட்டு இரவி மகத்தில் வரும்போது மழையில்லை.

சித்திரைமீ உரோகிணியில் மழை பெய்தால், உத்திராடத்தில் சூரியன் வரும்போது மழையுண்டு. கர்ப்போட்டங்கெட்டுப் பூசத்தில் சூரியன் வரும்போது மழையில்லை.

சித்திரைமீ திருவாதிரை நாளில் மழைபெய்யின், சதயத்திலிரவி வரும்போது மழையுண்டாகும். கர்ப்போட்டங்கெட்டு பூரத்தில் வரும்போது மழையில்லை.

சித்திரைமீ பூரநாளில் மழைபெய்யின், ரேவதியில் இரவிவரும்போது மழையுண்டாகும். கர்ப்போட்டங்கெட்டு மேடத்தில் வரின் மழையில்லை.

சித்திரைமீ பூசநாளில் மழைபெய்யின் அசுவதியில் இரவி வரும்போது மழையுண்டாகும். கர்ப்போட்டங் கெட்டுச் சுவாதியில் வரும்போது மழையில்லை.

சித்திரைமீ ஆயில்யநாளில் மழைபெய்யின், இரவி பரணியில் வரும்போது மழையுண்டாம். கர்ப்போட்டங்கெட்டு விசாகத்திற்கு வரும்போது மழையில்லை.

சித்திரைமீ மகத்தில் மழைபெய்யின், இரவி கார்த்திகையில் வரும்போது மழையுண்டாம். கர்ப்போட்டங்கெட்டு அநுடத்தில் வரும்போது மழையில்லை. இவைகளைச் செவ்வையா யாராய்ந்து மழை சொல்க.

ஜேஷ்டமீ சுக்கிலபக்ஷத்தில் திருவாதிரை முதல் 10 நக்ஷத்திரங்கள் வரை எந்தெந்த நக்ஷத்திரங்களில் மழைபெய்யுமோ அந்தந்த நக்ஷத்திரங்களில் சூரியன்வரின் மழையில்லை. திருவாதிரை முதல்10 நக்ஷத்திரங்களில் எந்தெந்த நக்ஷத்திரங்களில் மழைபெய்யவில்லையோ அந்தந்த நக்ஷத்திரங்களில் இரவி வரும்போது மழைபெய்யும்.

மார்க்கசிர சுத்த பிரதமை முதல் பௌர்ணமிவரை கர்ப்போட்ட மோடினால், ஜேஷ்டமீ கிருஷ்ணபக்ஷத்தில் மழையுண்டு

மார்க்கசிரமீ சதுர்த்தசியில் மகம் வந்து மின்னல் மின்னினால் ஆஷாட மாதத்தில் நன்மழையுண்டு.

மார்க்கசிர சுத்த சதுர்த்தசி பகலில் மழை பெய்தால் வருஷ கால இராத்திரியில் நல்லமழை பொழியும். இரவில் மழைபெய்தால் வருஷகாலத்திற் பகலில்மழையாம். [வருஷகாலமென்பன:— ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகையாகிய நான்கு மாதங்கள்.]

மார்க்கசிரமீ பௌர்ணமி யிரவில் மப்புமழையுமின்றி ஆகாயம் சுத்தமாயும் சந்திரன் பிரகாசமாயுமிருந்து தெற்கேயாவது வடக்கேயாவது மின்னல் தோன்றினால், மழைக்காலத்தில் துர்ப்பிட்சமும் உற்பாதமு முண்டாம்.

புஷ்ய சுத்ததின பௌர்ணமியில் உரோகிணி நக்ஷத்திரம் வந்து அன்றைக்குக் கர்ப்போட்டம் ஓடினால், கடகரவியில்மழைபொழியும்.

புஷ்யமீ பௌர்ணமி யிரவில் பனியோடு தசகாதுக்களும் நான்கு யாமத்துமிருந்தால், ஆவணிமீ முதல் கார்த்திகைமீ வரை மழையுண்டு. முதலியாமத்திற் காணின் ஆவணியிலும், இரண்டாம் யாமத்திற் புரட்டாசியிலும், மூன்றும் யாமத்தில் ஐப்பசியிலும், நான்காம் யாமத்திற் கார்த்திகையிலும் மழையுண்டென்றறியலாம். மேற்

கூறப்பட்ட அவ்வவ் யாமங்களில் தசதாதுக்களும் பனியும் இலதேல் கூறிய இந்நான்கு மாதங்களிலும் மழையே யில்லை.

புஷ்யமீ பௌர்ணமியிரவில் வருஷதாதுக்களுக்குரிய ஆதாரங்கள் இலவேல் ஒருமண்பாத்திரத்தில் இலவம்பஞ்சினை யிட்டு வீட்டுக்கூரையின்மேல் ஒருயாமப்பனியில் வைத்தெடுத்துப் பின்னர்ப் பிழிந்தெடுக்கச் சிறிததிகமாக நீர்வரின் ஆவணியில் நன்மழையுண்டென்றும், கசிந்து, துளித்துளியாக விழின் அம்மாதத்தில் அற்ப மழையுண்டென்றும், சலமே வராதொழிந்தால் ஆவணிமீத்தில் மழையேயில்லை யென்றுமறியலாம். இவ்விதமே யிரண்டாம் யாமத்திட்டறிந்து புரட்டாசியில் மழையுண்டல்லதில்லையென்றும், மூன்றும் நான்காம்யாமங்களிலுமறிந்து ஐப்பசி கார்த்திகைமாதங்களில் மழையுண்டல்லதில்லை யென்றுமறிக. பிரதிமாஸ மொன்றொன்றற்கும் பிரத்தியேகமாகக் காற் காற் பலம் இலவம்பஞ்சுவைத்துப் பார்க்கவேண்டும். முதல்யாமத்து வைத்திட்டறிந்தி பஞ்சினை மற்ற யாமங்களில் உபயோகப் படுத்தலாகாது.

புஷ்யமாத கிருஷ்ண பக்ஷத்தில் மூலநக்ஷத்திரம் முதல் அமாவாசியையவரை கீழ்காற்றடித்தால், ஆவணி முதல் நான்கு மாதங்கள் வரை நன்மழையுண்டு

மாகசுத்தப் பிரதமை அஷ்டமி துவாதசி பருவசந்திகளில் பனியுங்காற்றும் இருப்பின், ஜேஷ்டமாதத்தில் நன் மழையுண்டு.

மாகமீ விசாகம் ஆயிலியம் பூராடம் சுவாதி சதயம் மூலம் இந்நக்ஷத்திரங்களில் அதிகப்பனியேனும் காற்றேனுமிருப்பின், பாத்திரபத மாசத்தில் நன்மழையுண்டு.

மாகமீ பௌர்ணமி மகநக்ஷத்திரத்தில் மழைபெய்தால், வருஷகாலமாம் நான்குமாதங்களிலும் சமுத்திரதீர தேசங்களில் நன் மழை பொழிந்து சுபிக்ஷமுண்டாகும்.

மாகசுத்த சப்தமியில் சந்திரனுக்குப் பரிவேட மிட்டிருக்கக் காணின் சிராவணமீ சப்தமியில் பிசகாது நன்மழையுண்டென்னலாம்.

பால்குனமீ கார்த்திகைமுதல் மூலர் வரை மகம் பூரம் சுவாதி பூராடம் இந்த நக்ஷத்திரங்களில் தச தாதுக்கள் தோன்றின், அந்த மாதம் கர்ப்பமுண்டு

பால்குன சுத்தத்தில் உரோகணிநாளன்று சந்திரனைப்பரிவேடமிட்டிருந்தால், நன்மழையேனுந் தேசத்திற் கலகமேனுமுண்டு.

பால்குனமீ சித்திரை நக்ஷத்திரத்தினம் காற்றும் மழையுங் கலந்திருந்தால், சூரியன் சித்திரையிற் பிரவேசமாம்போது நன் மழையும் பயிர்விருத்தியுமுண்டு.

சைத்ர சுத்த ஏகாதசிமுதல் நான்குநாள் மழை பெய்தால் ஆவணி முதல் நான்கு மாதங்கள்வரை மழை கிடையாது.

சைத்ரசுத்த துவாதசி சதுர்த்தசி இந்தநாட்களில் மத்தியானம் வானவில் போட்டிருக்கக் கண்டால், வருஷகாலங்களில் மழையுண்டென்றும், இரவில் அவ்விதங்காணப்பெறின் தூர்ப்பிட்ச முண்டென்று மறிக.

வைசாகபௌர்ணமியன்று கீழ்த்திசையில் மேகஞ்சூழ்ந்து எவ்வளவு தூரம் மழைபெய்யுமோ அவ்வளவுதூரம் வரை வருஷ காலங்களில் நன்மழை பெய்து பயிர் பலிதமாகும்.

வைசாக சுத்த பிரதமைமுதல் சதுர்த்திவரை எந்நாளிலாவது மழை இடி காற்று இவை யிருந்தால், மாரிக்காலத்தில் நன்மழையுண்டு. மழையின்றி மப்பு மாத்திரமிருந்தால், மழைக்காலத்தில் மழையில்லை மப்பிருந்து மழையும் பொழிந்தால் வருஷகாலத்தில் மழையும் பயிர்பலிதமு முண்டு.

வைசாக கிருஷ்ண பஞ்சமியில் வடக்கேயுங் கிழக்கேயும மேக சஞ்சாரமிருந்தால், வருஷகாலத்தில் நல்லமழை பெய்து பயிர் பலிக்கும். அற்றைத்தினம் மின்னல் மின்னினால், மத்திமப் பயிர் சொற்பமாயப பலிக்கும். ஆகையால் அற்றைத்தினம் அவசியம் பரீக்ஷித்தல் வேண்டும்.

வைசாகி மாத உரோகிணியில் சூரியசந்திரர் கூடியிருக்கிற காலத்து மழைபெய்தால், வருஷகாலங்களில் நன்மழையுண்டு.

இடப பிரதம நவாம்சத்தில் சூரிய சந்திரரும் சிங்க பிரதம நவாம்சத்தில் குருசந்திரருங்கூடிய காலத்து மழை பெய்தால், அது முதல் மழைகால விறுதிவரை நன்மழையுண்டு.

வைசாக அமாவாசியையன்று மத்தியான சாயந்திரங்களில் மேக சஞ்சாரமிருந்தால், மழைகாலத்தில் நன் மழை பொழிந்து மூன்று பங்கு பயிர் பலிதமாகும்.

இடபத்தில் சூரியனிருக்கையில் சந்திரனுஞ் செவ்வாயும், அல்லது செவ்வாயும்புதனும் மேடத்திலாவது மிதுனத்திலாவது இருப்பின், அவ்வருஷத்திற் சொற்பமழையுண்டு.

மிருகசிரம் திருவாதிரை புனர்பூசம் இந்நக்ஷத்திரங்களில் சூரியன் சஞ்சரிக்குங்காலத்து அதற்கு ஆறுவது நக்ஷத்திரங்களாகிய மகம் பூரம் உத்திரமிவைகளில் (சந்திரன் வரும்போது) மழை பெய்தால், அந்த வருஷத்தில் நல்ல மழையுண்டு.

மேற்சொன்ன மூன்று நக்ஷத்திரங்களில் இரவி வரும்போது அந்தந்த நக்ஷத்திரங்கட்கு ஒன்பதாவது நக்ஷத்திரத்தில் மழை பெய்தால், அவ்வாண்டில் மழையில்லை.

ஜேஷ்டமாதத்தில் நிருதிக்காற்றோடு மேற்றிசையில் வானவில்லிட்டிருந்தால், அதுமுதல் பங்குனி வரை மழையில்லை அல்லது விற்காணப்பட்டது முதல் இரண்டு மாதம் வரைக்குமாவது மழை யில்லாமலிருக்கும்.

ஜேஷ்டமாதத்தில் சித்திரை அநுஷம் கேட்டை இந்நக்ஷத்திரங்களுக்குத் * தெற்கிற் சூரியன் சஞ்சரித்தால் அது முதல் ஆறு மாதம் வரை மழையில்லை.

ஜேஷ்ட சுக்கில அஷ்டமியில் மழைபெய்திடி யிடித்தால், மழை பெய்யுந்தூரம் வரையும், இடியின் ஒலி கேட்குந்தூரம் வரையும், மழைக்காலத்தில் நல்ல மழைபெய்து பயிர்விருத்தியாகும்.

---

* மேருவுக்கு வடக்கில் பரணி முதல் 9 நட்சத்திரங்களும், மத்தியத்திற் பூரம் முதல் 9 நட்சத்திரங்களும், தெற்கிற் பூராடம்முதல் 9நட்சத்திரங்களு மிருக்கின்றன.

ஜேஷ்ட சுக்லபக்ஷ சித்திரை சுவாதி விசாகம் இந்நாட்களில் ஆகாயத்தில் மேகமில்லாது சுத்தமாயிருந்தால் சிராவண மாதத்தில் நல்ல மழையுண்டு.

ஜேஷ்ட சுக்கில துவாதசி முதல் நான்கு நாள்வரை ஆகாயத் தேமப்பில்லாமல் நிர்மலமாயிருந்து மழைத்துளிகள் பூமியில் விழுந் தாலும், சாயந்திரம் கிழக்கிலும் வடக்கிலுங் காற்றோடு மேகசஞ் சாரமாயிருந்தாலும், மழைக்காலங்களாகிய நான்கு மாதங்களிலும் மழைபொழிந்து, பயிர் விருத்தியாகும். அவ்வாறில்லதேல் மழை யில்லை. துவாதசியிலவ்வாறிருப்பின் ஆவணியில் மழையென்றும், திரயோதசியில் காணப்பெறின் புரட்டாசியில் மழையென்றுமறிக. மற்றவைகட்கு மிவ்வாறே கொள்க.

ஜேஷ்டமீ் அசுவனி முதல் ஐந்து நக்ஷத்திரங்கள் வரை மழை பெய்தால் அந்த ஸம்வத்ஸரத்தில் ஐந்து * துரோண மழையுண்டு.

பூராடம் உத்திராடம் திருவோணம் பூரட்டாதிஇந்தநாட்களில் மழைபெய்தால் அந்த வருடத்தில் ஏழு துரோண மழையுண்டு

அநுஷம் மூலம் உத்திரட்டாதி ரேவதி இந்த நாட்களில் ஒவ் வொரு நாளிலும் மழை பெய்தால், ஒவ்வொரு துரோண மழை அதிகமுண்டெனக் கொள்க. அனுஷத்திற் பெய்தால், அவ்வாண்டி லொரு துரோண மழை யென்றும், அனுஷ மூல மிவ்விரண்டு நாட் களிலும் பொழிந்தால், இரண்டு துரோண மழை யெனவு மறிக மற்றவைக்கு மிவ்வகையே கொள்க.

அவிட்டம் சதயம் விசாகம் கேட்டை இந்த நக்ஷத்திரங்களில் மழை பெய்தால் முறையே 8, 6, 2, 14 துரோணவிருஷ்டி யவ்வா ண்டிலுண்டு.

---

*வாய்ப்புறம் மூன்றங்குலச் சுற்றளவுடையதும் நான்கு மரக்கால் ஜலம் நிரம்பக்கூடியதுமான, ஒரு மட்பானை நிரம்பப் பெய்யுமழைச்சலத்தைத் துரோண மென்ப.

உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி இந்த நாட்களில் ஒரு நாளில் மழை பெய்தால், அவ்வருஷத்தில் 20 துரோணமழையுண்டு.

திருவாதிரை மகம் இந்த நாட்களில் ஒரு தினம் மழை பெய்தால், அவ்வருஷத்தில் 13 துரோண விருஷ்டியுண்டு. புனர்பூசம், ஆயில்யம், பூர மிவற்றுளொன்றில் மழை பெய்தால், 8 துரோண மழை யவ்வாண்டிலுண்டு.

ஜேஷ்ட மாதத்தில்எந்தக்கிரகத்தோடு சந்திரன்கூடியபொழுது முதலில் மழை பெய்யுமோ அந்தக்கிரகத்தைக்கொண் டவ்வருடத்திற்கு மழைப்பிரமாணஞ் சொல்லவேண்டும்.

ஜேஷ்ட மாதத்தில் முதன் மழை பெய்யுங்காலைச்சந்திரன் குருவோடிருந்தா லவ்வாண்டில் மழையுண்டு. சந்திரன் சுக்கிரனுடன் கூடியிருக்கையில் முதன் மழை பெய்தாற் பயிர்விருத்தியுண்டு. சந்திரன் குரு சுக்கிரருடன் சேர்ந்த காலத்து முதன்மழை பொழியின் அந்த வருஷத்தில் நல்லமழை பெய்யும். சந்திரன் அங்காரகனோடிருந்தாற் பயிர் நாசமாம். சந்திரன் புதனோடிருந்தாற்கீழ்க்காற்றுண்டு. அவர் சனியுடன் கூடியபொழுது முதன்மழை பெய்தால், அவ்வாண்டில் ஜனங்கட்கு ரோகம், இராஜ கலக மிவையுண்டு. முதன் மழை பெய்யுங்காலை சந்திரனுடன் சூரியன் கூடினு லவ்வாண்டில் மழையில்லை. பயிர்நாசமுண்டு. அரசர்களுள் பரஸ்பரங் கலகமுண்டாம்.

சூரியனுஞ் சந்திரனுங் கூடியபோது சூரியமண்டலங் கறுப்பாயிருந்தாற் பூமியிலுள்ள ஜனங்கட்கு அவமிருத்யு உண்டு.

வைசாகத்திலாவது ஜேஷ்டத்திலாவது சூரியன் உரோகிணியிலிருக்கும்போது பொழியும் முதன்மழை நீர்த்துளியை யுள்ளங்கையிற் பிடித்தருந்தி உருசிபார்க்கவேண்டும்.

மழைத் துளியையுள்ளங்கையிற் பிடித்தருந்த உப்பாயிருந்தால். அவ்வாண்டில் கோதுமையுஞ் சோளமுஞ் செம்மையாய் விளையும் உருசியிலதேல் இவ்வருஷத்தில் மழையில்லை.

மதுரமாயிருந்தால் எல்லாப்பயிர்களும் பூரணமாய்ப் பலிக்கும். புளிப்பானால் தானியங்களிற் பதர் விசேஷமாயிருக்கும் காரமாயின் தினை விசேடமாய்ப்பலிக்கும். கலப்பாயிருந்தாற் சாமை கேழ்வரகு

கம்பு வரகு இவை செவ்வையாய்ப் பலிக்கும். கசப்பாயிருந்தால் உழுந்து எள் கொள்ளு பச்சைப்பயறு பஞ்சு இவையதிகமாக வுற்பத்தியாகும்.

ஆஷாடசுக்த பிரதமையில் மிருகசீரிட நக்ஷத்திரமிருக்கும் பொழுது ஆகாயத்தில் அதிகமாய் மேகங்கள் பரவினுல் அவ்வருஷாரம்பத்தில் விதைக்கற பயிர்கள் விசேஷமாய்ப் பலிக்கும்.

அன்று சாயந்திரம் மேற்கே மேகங்கள் பரவினுல் அவ்வாண்டில் எல்லாப்பயிர்களும் செவ்வையாய்ப்பலிக்கும்.

ஆஷாடமாதத் திருபக்ஷத்துமுள்ள நவமி தசமி பௌர்ணிமி ஆகிய இத்தினங்களில் மழைபெய்தால் அவ்வாண்டாரம்பத்தே விதைக்கும் பயிர்கள் செவ்வையாய்ப் பலிக்கும்.

ஆஷாடமீ சுக்கிலபக்ஷ பௌர்ணிமி பகல் நாலு ஜாமத்திலும் காற்று வீசிக்கொண்டிருந்தால், ஆவணிமீ முதல் நான்கு மாதங்கள் வரை நல்ல மழையுண்டு.

மழை யறிதற்கு மேற்சொல்லப்பெற்ற தினத்திற் கொடிகட்டிப் பார்க்கு மிலக்கணம்.

ஆஷாடமீ சுக்கிலபக்ஷ பௌர்ணிமி காலையில் ஒழுங்கானதும் இருபத்துநான்கு முழமுள்ளதுமான ஒருமூங்கிலில் துகில்கட்டிப் பார்க்கவும். முதற் சாமத்தில் தென்கிழக்குக் காற்றடித்தால் ஆவணி மாதத்தில் மழையுண்டு. வடகாற்றடித்தா லம்மாதத்தில் மழையில்லை. இரண்டாஞ் சாமத்திற் கீழ்க்காற்றடித்தால் புரட்டாசியில் மழையுண்டு. ஈசானக் காற்றடித்தால் மழையில்லை. மூன்ருஞ் சாமத்திலீசானக் காற்றடித்தால் ஐப்பசியில் மழையுண்டு. தென்மேற்குக் காற்றடித்தால் மழையில்லை. நாலாவது சாமத்தில் வடமேற்குக் காற்றடித்தால் கார்த்திகையில் மழையுண்டு. தென்காற்றடித்தால் மழையில்லை.

ஆஷாட கிருஷ்ணபக்ஷ பிரதமை சதுர்த்தி பஞ்சமி ஷஷ்டி இந்தத் திதிகளில் மழைபெய்தால், அந்த வருஷம் மழைபெய்து பயிர்கள் விருத்தியாகும்.

ஆஷாட கிருஷ்ண சப்தமியிற் சந்திரன் மீனத்திலிருக்கும் பொழுது சந்திரனைப் பரிவேடம் சூழ்ந்தால், பூமியில் நல்ல பலித முண்டு.

ஆஷாடபகுள அஷ்டமியிற் காற்றடித்தாலும், நவமியில் மின்னல் மின்னினாலும், தசமியில் உரோகிணி வந்தாலும் அவ்வருஷம் நல்ல மழையுண்டு.

ஆஷாடபகுள ஏகாதசிமுதல் அமாவாசியைக்குள் மழைபெய்தால், பூமியில் நல்ல மழை பொழிந்து பயிர் விருத்தியும் அர்க்க விருத்தியுமுண்டு.

சிராவண சுக்லபக்ஷத்தில் சித்திரை சுவாதி விசாகம் இந்த நாட்களில் தசதாதுக்கள் தோன்றினால் சிராவணமாத கர்ப்பமுண்டு.

சித்திரையில் தசதாதுக்கள் தோன்றினால் அநுடம் முதல் எட்டு நக்ஷத்திரங்களில் நல்லமழையுண்டு. சுவாதியில் தசதாதுக்கள் தோன்றினாற் பூரட்டாதி முதல் எட்டு நக்ஷத்திரங்களில் நல்ல மழையுண்டு.

விசாகத்தில் தசதாதுக்கள் தோன்றினால், திருவாதிரை முதல் எட்டு நக்ஷத்திரங்களில் நல்ல மழையுண்டு.

சிராவணஸ்ரீ, சுக்கில கிருஷ்ணபக்ஷ தசமியில் மப்புப் பரவினால் அது முதல் நல்ல மழை பெய்து பயிர் விருத்தியுண்டாகும்.

சிராவண கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியில் மழை பெய்தால் முதற் பயிர் கெட்டு இரண்டாவது பயிர் விருத்தியாகும்.

சிராவண பகுள அமாவாசியையில் எவ்வளவுதூரம் மழை பெய்யுமோ அவ்வளவுதூரம் வரை யவ்வாண்டில் மழை பெய்து பயிர் பலிக்கும்.

சிராவண மாதத்திற் சித்திரை சுவாதி விசாகம் இந்நாட்களில் மழைபெய்தால், அந்தவருஷம் தானியம்பலிக்கும். ஆகையாற்பழைய தானியங்களை விற்றுவிட்டுத் தனஞ்சம்பாதிக்கவேண்டும். மேற் சொன்ன மூன்று நக்ஷத்திரங்களில் மழை பெய்யாவிட்டாற் பயிர் கெட்டுப்போகும். ஆதலால் இரத்தினங்களிருந்தாலும் அவைகளை விற்றுவிட்டுத் தானியங்களை வாங்கிச் சேர்த்துவைக்கவேண்டும்.

பாத்ரபதமாத சுத்தபிரதமை முதற் சுவாதிவரை மழையுங் காற்றுமிருந்தால் அதுமுதல் நல்ல மழை.

அந்தமாதத்திற் சதயமுதல் மூன்று நக்ஷத்திரங்கள் வரை தசதாதுக்கள் தோன்றின், பின்னர்ப் பயிர் செவ்வையாய்ப் பலிக்கும்.

பாத்ரபத பௌர்ணிமியில் மழையில்லா திடியிடித்தா லவ்விடி யெவ்வளவு தூரங் கேட்குமோ அத்தூரம்வரை மழையில்லாது பயிர் கெட்டுப்போம்.

பாத்ரபதமாத பௌர்ணிமிமுதல் மிருகசீரிடம்வரைமழைபெய்தாற் கார்த்திகை மாதத்தில் அதிக மழைபொழிந்து பயிர் விருத்தியாகும்.

ஆஸ்விஜ சுத்தத்திற் சுவாதிமுதல் நான்கு நக்ஷத்திரங்கள்வரை மழைபொழிந்தாற் பயிர் பூர்ணமாய்ப் பலிதமாகும்.

ஆஸ்விஜபகுள திரயோதசியிலும் அஸ்தமுதல் ஐந்து நக்ஷத்திரங்களிலும் காற்றுடன் மழைபொழிந்தாற் சகலவகைப் பயிரும் செவ்வையாய்ப் பலிக்கும்.

அஸ்தத்தில் இரவியிருக்கும்போது மழைபெய்தாற் பூமியில் விசேஷமாய் மழைபெய்து பயிர் பலித்துச் சுபிக்ஷமாயிருக்கும்.

சூரியன் ஓரிராசியினின்று மற்றோரிராசிக்குப் பிரவேசிக்குங் காலத்தினும், சுக்கில கிருஷ்ணபக்ஷங்களின் கடைசியிலும் * பௌர்ணிமி யமாவாசியை சந்திப்பினும் ஒவ்வோர் திதியினீற்றினும், † இராசி சந்திப்பினும், ‡ இலக்கின சந்திகளிலும் மழைக்காதாரமென்றறிக.

தவளைகள் ஜலத்தினின்று விலகிக் கரையில்வந்து கத்தினாலும், அவை மரத்திலேறினாலும், அவற்றின் நுரை மரத்தடியி லுண்டானாலும், அவை பரஸ்பரஞ்சண்டையிட்டுக்கொண்டாலும், மிருகங்கள் தண்ணீரிலிறங்கிநீரருந்தாது ஆகாயத்தைப்பார்த்தாலும், மீன்கள்

---

* இவைகளின் முடிவில் இரண்டு நாழிகை.

† ழேட சிம்ம தநுசு இவைகளின் ஆரம்பத்தில் அரைநாழிகையும் கர்க்கி விருச்சிக மீன மிம்மூன்றி னீற்றில் அரைநாழிகையும் இராசி சந்தியென்ப.

‡ சமஸ்த இராசிகளின் கடைசிப்பாகங்களும் இலக்கினசந்தியென்ப.

மேலே கிளம்பிக் குதித்தாலும், பக்ஷிகள் சாம்பரிற் புரண்டாலும், நாகப்பூச்சி வெயிலிற் புரண்டாலும், ஆடு புற்றின்மேலேறினாலும், எறும்புகள் முட்டைகொண்டுபோனாலும், டகக்கள் குதித்துக்காதை ஆட்டினாலும், அவை யதிகமாகத் தும்மினாலும், தூசியெழ அவை ஓடினாலும் மழைவருமென்றறிக.

சூரியனுக்கு வடக்கே மற்றொரு சூரியன் றோன்றினால் விசேஷ மழை. தெற்கே தோன்றினால் விசேஷக் காற்று. இருபக்கங்களி லுந் தோன்றினால் அத்தேசத்திற்குச் சத்துருபயமாவது விசேஷ மழையாவதுண்டு. மேற்கே தோன்றினால் அரசர்களுக்குக் கெடுதி. கிழக்கே தோன்றினால் ஜனங்கட்கே கெடுதி.

ஜேஷ்டம் ஆஷாடம் சிராவணம் இம்மூன்று மாதங்களிற் பூசம் முதல் ஏழு நக்ஷத்திரங்கள் வரை கிழக்கிலும மேற்கிலும் வானவில் லிருந்தால் அநாவிருஷ்டியும் க்ஷாமமுமுண்டு. மூக்கிலபக்ஷத்தில் மேற்சொன்ன ஏழு நக்ஷத்திரங்கள் தவிர மற்ற நக்ஷத்திரங்களில் மேற்கே மாத்திரம் வானவில்லிருந்தால் சுபிக்ஷமும் மழையுமுண்டு.

உதயாஸ்தமன காலங்களில் ஆகாயத்தில் மேகம்பரவிக் கிழக்கி னும் மேற்கினும் மின்னன் மின்னினால் மழையில்லை.

சர்வ திக்குகளிலும் மேகம்பரவி நடு ஆகாயத்தில் மின்னினா லும், அம் மேகங்களுக்குக் *கோநேத்திரசாயை உண்டானாலும், சூரியோதயசந்தியாகாலங்களிற் சுவானங்கள் ரோதனஞ்செய்தாலும் உடனே மழைபுண்டு; அல்லது பரசக்கர பயமுண்டு.

மலை, யானை, மரம், பசு, அல்லி, மனுஷன், முதலை, மச்சம், பன்றி, ஒட்டகம், எருமை, ஸ்திரீ, ஆலமரம், மெத்தைவீடு, †கர்ச்சூர விருக்ஷம், மணல்மேடு, அலை, எருது, கட்டில், கொடி, சாமரை, குடை இவைகளைப்போல மேகங்கள் தோன்றினால் மழையுண்டு.

கிழக்கிலும் மேற்கிலும் காலையிலும் மாலையிலும் ‡மூங்கில் போல மேகம் பரவிக் கறுப்பாகவாவது சிவப்பாகவாவது இருந் தால் உடனே மழையுண்டு.

---

* ஆகாயத்தே சஞ்சரிக்கும் மேகங்களின் சாயை பூமியிற் பசுவின்நேத் திர படிவம் போற் காணப் பெறுவது. † சழற்கொடி, பேரீந்து.

‡ மேகங் காலிறங்குதல்.

வீணை, கொடி, செவ்வல்லி, சிவப்புவஸ்திரம், மனுஷன், மயில், குரங்கு, நாய், நரி, சர்ப்பம், கரடி, ராக்ஷசசைனியம், மயிலிறகு, இவைபோல் மேகம் பரவின் உடனே மழைவரும்.

கருமேகங்களில் மின்னினாலும், ஆகாயத்தில் மேகமில்லாது மின்னினாலும் காற்றினால் மேகமுடைந்து போனாலும் அவ்வாண்டில் மழையில்லை.

மத்தியானத்திற் கறுப்புமேகம் பரவிச் சாயந்திரத்தில் மப்பில்லாது ஆகாயம் நிர்மலமாயிருந்தாலும், ஆகாயத்திற் சுற்றினாலும் புலியைப்போற் சாரி சாரியாக வெண்மப்புகளிருந்து நடு ஆகாயம் நிர்மலமாயிருந்தாலும் மழையில்லை.

காலையில் தூரத்திலிருந்து மத்தியானத்தில் மேகஞ்சூழ்ந்து இராத்திரியில் ஆகாயம் நிர்மலமாயிருந்தால் அத்தேசத்தில் மழையில்லை.

ஞாயிற்றுக்கிழமையில் மிருகசீரிடமும், திங்கட்கிழமையில் திருவாதிரையும், செவ்வாய்க்கிழமையில் ஷஷ்டியும், புதன்கிழமையில் திருதியையும், வியாழக்கிழமையில் ஏகாதசியும், வெள்ளிக்கிழமையில் திரயோதசியும், சனிக்கிழமையில் மூலமும் வரின் ஜலயோக நாட்களென்றறிக.

அஸ்வதி பரணி கார்த்திகை யிவைகளிற் புத சுக்கிரர் கூடியிருந்தால் அற்பவிருஷ்டியுண்டு. உரோகிணி மிருகசீரிடம் திருவாதிரை இவைகளில் அவர்களிருந்தால் அனுவிருஷ்டியுண்டு. புனர்பூசம், பூசம், ஆயில்ய மிவைகளிலிருந்தால் அதிவிருஷ்டி யுண்டு. மகம்முதல் ஏழு நக்ஷத்திரங்கள் வரை கூடியிருந்தால் சுவிருஷ்டியுண்டு. அநுடம்முதல் ஒன்பது நட்சத்திரங்கள்வரை கூடியிருந்தால் விருஷடிநாசமுண்டு. உத்திரட்டாதி ரேவதி யிவற்றிற் கூடியிருந்தால் சுவிருஷ்டியுண்டென்றறிக.

அபிஜித்து நக்ஷத்திரத்தைச்சேர்த்த 28 நக்ஷத்திரங்களையும் கார்த்திகை முதல் சர்ப்பாகாரமாய் ஏழு நாடியாக எழுதிக்கொள்க.

முதலாவது * அமிர்தநாடி 2-வது ஜலநாடி 3-வது நிரசநாடி, 4-வது சௌமியநாடி, 5-வது தகனநாடி, 6-வது வாதநாடி, 7-வது சண்டநாடி எனக்கொள்க.

கார்த்திகை விசாகம் அநுடம் பரணி இவைகளைச் சண்டநாடி அல்லது ஊர்த்துவநாடி யென்ப. இதற்கதிபதி சனி.

உரோகிணி, சுவாதி, கேட்டை, அஸ்வதி இந்நான்கினையும் வாயு நாடி யென்ப. இதற்கதிபதி சூரியன்.

மிருகசீரிடம் சித்திரைமூலம் இரேவதி இவைகளைத் தகனநாடி யென்ப. இதற்கதிபதி அங்காரகன்.

திருவாதிரை அஸ்தம் பூராடம் உத்திரட்டாதி இவைகளை நிரஸ நாடியென்ப. இதற்கதிபதி குரு.

புனர்பூசம் உத்திரம் உத்திராடம் பூரட்டாதி இந் நான்கையும் ஜலநாடி யென்ப. இதற்கதிபதி சுக்கிரன்.

பூசம் பூரம் அபிஜித்து சதயம் இந்நான்கையும் மேகநாடி அல்லது சௌமியநாடி யென்ப. இதற்கதிபதி புதன்.

ஆயில்யம் மகம் திருவோணம் அவிட்டம் இந்நான்கையும் இரச நாடி யென்ப. இதற்கதிபதி சந்திரன்.

சந்திரன் அமிர்தநாடியிலிருந்தால் 3, 4, 5, 7-இத் தினங்களில் ஒரு நாண் மழையுண்டு.

சந்திரன் ஜலநாடியில் இதர கிரகங்களோடு சேர்ந்திருந்தால் ஒன்றரைநாள் விடாமழையும் அல்லது ஐந்து நாள்வரை விடாமழையும் மூன்று அல்லது நான்கு நாள்வரை விடாமழையும் பொழியும் மற்றவைகளுக்கும் அவ்விதமே யறிக.

நிரஸ நாடியிற் சந்திரன் இதர கிரகங்களோடு சேர்ந்திருந்தால் ஒன்றரை நாள் அல்லது முப்பது நாள்வரை விடாமழையுண்டு.

---

* அமிர்தநாடி யென்பது சுத்தநாடி யென்றும் இரசநாடி யென்றும் அழைக்கப்பெறும்.

அமிர்தநாடிமுதல் மூன்றுநாடியில்சந்திரன் சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் 18 - 12 அல்லது 16 நாள்வரை விடாமழை யென்றறிக.

சௌமிய நாடியிற் சப்த கிரகங்களுமிருந்தால்மூன்றுநாள்விடா மழை. மற்ற மூன்று நாடிகளிலும் கிரகங்களிருந்தால் மேகங்கள் உடைந்து பனித்தூறலாய் இருக்கும்.

யாம்ய நாடியில் குரூர கிரகங்களிருந்தால் அனாவிருஷ்டியுண்டு சுபரும் பாவரும் கலந்திருந்தால் மத்தியவிருஷ்டி யுண்டு. இந்நாடியைச் சண்டநாடியென்ப.

ஒருநாடியிற் சந்திரனும் அங்காரகனுமாவது அல்லது குருவுஞ் சந்திரனுமாவது கூடியிருந்தால் நல்ல மழை பொழியும்.

பூதனுஞ் சுக்கிரனுங் குருவுஞ் சந்திரனுஞ் சேர்ந்தால் விசேட மழையுண்டு.

அசுவதியில் இரவியிருக்கும்போது மழைபெய்தால் முற்பயிர்கள் பலிக்கும். பரணி கார்த்திகைகளி லிருந்தால் எல்லாப்பயிருஞ் செழித்துப் பலிக்கும். இரேவதியில் இருக்கும்போது பின்பயிர் யாவும் பலிக்கும்.

குருவுஞ் செவ்வாயு மேகநாடியி லிருக்கும்போது சந்திரன் *ஜலராசியிலிருந்தாற் பூமியில் விசேஷமாய் மழை பொழியும்.

சூரியனுக்குஞ் சுக்கிரனுக்கும் முன்னே அங்காரகன் நடந்தாற் பனிபோல் தூறலும் சுழிமழையும் உண்டு.

குருவுஞ் சூரியனும் அல்லது குருவுஞ் சுக்கிரனும் சமசத்தமத்திலிருந்தால் மழையில்லை.

சுபக்கிரகநாடியிற் சுபக்கிரகங்களிருந்து சந்திரனும் அந்தச்சுபக் கிரகங்களோடு கூடினால் விசேட மழையுண்டு.

---

* மகர கடக கும்ப மீனம்.

இவைபற்றி இடபம், கடகம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் இவ்வேழுஞ் சலராசிகளாமெனவும், இவைகளுள் பூர்ணஜலராசியாவன கடக மீனமிவையெனவும், முக்காற்சலராசியாவன மகரகும்பமிவையெனவும், அரை ஜலராசியாவது துலாமெனவும், காற் சலராசியாவன ரிஷப விருச்சிக மிவையெனவும் ஞானப்பிரதீபிகையின் கூபகாண்டத்துப்பதினொன்றாவது சுலோகத்தானும், சரிதாகமன காண்டத்து மூன்று நான்காவது சுலோகங்களானும் அறியக்கிடக்கின்றன.

சௌமிய நாடியிலாவது ஜலநாடியிலாவது சௌமிய கிரகங்க ளோடு சந்திரன் கூடினுல் மழையோகமென்ப.

ஓரிராசியில் புத சுக்கிர சந்திரர் கூடினுலும், சௌமியநாடியிற் கூடியிருந்தாலும் விசேட மழையுண்டு.

சூரியன் சந்திரன் சநி இவர்கள் வெவ்வேறு நாடிகளிலிருந்தால் உற்பாதங்கள் உண்டாகும். அரசர்களுக்குள் யுத்தமுண்டு.

மழைக்காலத்திற் சுக்கிரன் சுக்கிர நாடியிலிருந்து அஸ்தமன மாகாமலிருந்தால் நல்ல மழைபெய்யும் ; நாடு செழிக்கும்.

ஆண்கிரகமும் ஆண்கிரகமும் இராசியிற் சேர்ந்தால் தாபம் என்ப. அலிக்கிரகமும் அலிக்கிரகமுஞ் சேர்ந்தாற் குளிர்ச்சியென்ப. பெண்கிரகமும் பெண்கிரகமுஞ் சேர்ந்தால் துர்த்தினமென்ப. ஆண் கிரகமும் பெண்கிரகமுஞ் சேர்ந்தால் மழையென்ப. பெண்கிரகமும் அலிக்கிரகமுஞ் சேர்ந்தாற் காற்றென்ப. ஆண்கிரகமும் அலிக்கிரக மும் சேர்ந்தால் மழையென்ப.

இரேவதி உரோகிணி சுவாதி அநுடம் இந்த நக்ஷத்திரங்களில் அங்காரகன் இருந்தால் மிக்க வெயிலும் அனுவிருஷ்டியும் உண்டு.

புத சுக்கிரர்க்கு முன்னே சூரியனிருந்தால் சம்வர்த்த ஜலயோக மென்ப. அஞ்ஞான்று விசேட மழைபுண்டு.

புதன் சுக்கிரர்க்கு மத்தியில் அங்காரகனிருந்தாற் காற்றடிக்கும்.

புதன் சுக்கிரர்க்கு மத்தியில் இரவியிருந்தாற் கடல் வற்றும்.

இவர்களுக்கு மத்தியிற் சந்திரனிருந்தாற் காற்று, மழை, கன் மழை இவையுண்டாகும்.

ஜலராசியிற் சந்திரனிருக்குங்காலை அவற்கு நான்கிலாவது ஐந்தி லாவது ஒன்பதிலாவது சூரியனுஞ் சனியுஞ் சுக்கிரனு மிருந்தால் நன்மழை பொழியும்.

கிரகங்கள் உதயாஸ்தமனமானுலும் வக்கிரமானுலும் நன்மழை யுண்டு.

புத சுக்கிரோதய காலங்களிற் குருவோடு சந்திரன் கூடியிருந் தாற் சந்திரயோகமென்ப. அஞ்ஞான்று நன்மழை பொழியுமென்க.

ஜலராசியி னதிபதிகளோடாவது ஜலராசிகளிலாவது * ஜல நக்ஷத்திரங்களிலாவது சந்திரனிருக்கும் காலங்களில் மழைபெய்யும்.

குரூரகிரகங்களோடாவது அல்லது சுபக்கிரகங்களோடாவது சந்திரன் சேர்ந்து ஜலநக்ஷத்திரங்களிலிருந்தாற் பூரண விருஷ்டி யுண்டு

உதயாஸ்தமனமாயிருக்குங் கிரகங்கள் வக்கிரித்தாலும் சங்கிர மண காலத்திற் சலராசியிலிருந்தாலும் மழைத் தூற்றலாயிருக்கும்.

இரவி, குரு, புதன் இக்கிரகங்களோடு சந்திரன் சேர்ந்தால் விசேஷ மழை பெய்யுமென்று பிரமயாமளங் கூறுகின்றது.

குஜனோடு சந்திரன் சேர்ந்து இவர்களுக்கு ஐந்தில் புத சுக்கி ரர்களிருந்தால் அதிவிருஷ்டி யுண்டாகுமென்று லம்பாகங் கூறுகின் றது.

குஜன் சுக்கிரன் புதன் இவர்கள் ஓரிராசியில் அவரவரின் சொந்த திரிம்சாம்சத்திலிருந்தால் அதிக மழையுண்டென்றும் அந்நியர்களின் திரிம்சாம்சத்லிருந்தாற் சொற்ப மழையுண்டென்றும் அறியக்கிடக் கின்றது.

சுக்கிரன் புதன் சந்திரன் ஓரிராசியிலிருந்தால் அதற்குச் சென்ம ராசியென்ப. அஞ்ஞான்று அதிவிருஷ்டி யுண்டாமென்று மநு சொல்லுகின்றார்.

சிங்கத்திற் சந்திரனும் ரிஷபத்திற் சுக்கிரனும் மிதுனத்திலாவது கடகத்திலாவது புதனும் இருந்தாற் காற்பாகம் மழைபெய்யும்.

இலக்கினத்திற்கு 5, 2, 3, 8ல் சுக்கிரனுஞ் சனியும் வக்கிரித் திருந்தாலும், சத்தமதீதிற்சந்திரனிருந்தாலும் விசேடமழைபெய்யு மென்று ஆரூடஞ் சொல்லவேண்டும்.

---

* ஜல நக்ஷத்திரங்கள்:—உரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், ஆயில்யம், ஹஸ்தம். சித்திரை, சுவாதி, கேட்டை, பூராடம், திருவோணம் ஆம் இவைகளெனச் சோதிடகிரகசிந்தாமணி கூறுகின்றது.

*ஆரூட லக்கினத்திற்கு ஐந்திலாவது ஆறிலாவது குருவுஞ் சந்திரனு மிருந்து புத சுக்கிரர்களாற் பார்க்கப்பெற்ருல் இடியோடு கூட அதிவிருஷ்டி யுண்டாகும்.

ஆரூட லக்கினம் ஜலராசியானாலும் சந்திரன் ஜலராசியிலிருந்தாலும் ஆரூட லக்னுதிபன் மித்ரு ஸ்தானத்திலிருந்தாலும் மழையுண்டு.

வருஷப்ரசனை சுக்கில பக்ஷமாயிருந்து லக்ன கேந்திரங்களிற் சுபர் இருந்தால் மழையுண்டு.

மேருவுக்கு வடக்கிற் பரணிமுதல் ஒன்பது நக்ஷத்திரங்களும் மத்தியத்திற் பூராமுதல் ஒன்பது நக்ஷத்திரங்களும் தெற்கிற் பூராட முதல் ஒன்பது நட்சத்திரங்களு மிருக்கின்றன.

மழைக்காலத்திற் புதன் உதயத்திற்குமுன் சுக்கிரோதயமானல் தாபமும், வெயிலும் சுக்கிரோதயத்திற்கு முன்னேர்ப் புதோதயமானல் மழையும், சுக்கிரோதய காலத்தில் தெற்கிலும் வடமேற்கிலும் மின்னினுற் பயிர் விருத்தியு முண்டு.

சுவாதி ஆயில்யம் சித்திரை இந்த நக்ஷத்திரங்களிற் சுக்கிரோதயமானல் அரசர்களுக்கு அபகீர்த்தியும், அனுவிருஷ்டியுமுண்டாகும்.

சூரியனுக்குவடக்கிற் சுக்கிரனிருந்தாற் சகல பயிருஞ்செழித்து அவ்வருஷம் நன்ருய்ப் பலிக்கும்.

பரணிமுதல் நான்குநாள்வரை சுக்கிரனுக்கு உதயாஸ்தமன முண்டானல் ஜனங்களுக்குத் தேஜோஹானியும், விசேட தானிய விளைவு முண்டு.

திருவாதிரை முதல் நான்குநாள் வரை உதயாஸ்தமனமானுற் பிராமணேத்தமர்கட்குப் பீடையும், பயிர்விருத்தியுமுண்டு.

---

* ஆரூடங் கேட்கவந்தவன் எத்திக்கிலிருக்கின்ருனே அத்திக்குக்கு மேஷாதி இராசிகளுள் எந்த இராசி யேற்படுகிறதோ அந்த இராசியே ஆரூடவிராசியாம்.

மகமுதல் ஐந்துநாள் வரை சுக்கிரோதயாஸ்தமனமானால் அரசர் மனிதர் பசுக்கள் இவர்கள் மரணமாவர்.

கேட்டை முதல் ஐந்து நாட்கள்வரை சுக்கிரன் உதயாஸ்தமனமானால் துர்ப்பிக்ஷமெங்கு முண்டாகும். சுவாதி முதல் மூன்று நாட்கள் வரை உதயாஸ்தமனமானால் மழைபெய்யும்.

அவிட்டமுதல் ஐந்துநாட்கள்வரை உதயாஸ்தமனமானால் அரசர்களுள் பரஸ்பரம் யுத்தமும், பயிர்விருத்தியுமுண்டு.

அஸ்வதியிற் சுக்கிரன் உதயாஸ்தனமானாற் பிரஜைகளுக்குச் சுகமும், பயிர் விருத்தியுமுண்டு.

கிருஷ்ணாஷ்டமி சதுர்த்தசி அமாவாசியை இந்தத்திதிகளிற் கிழக்கிலும் ஈசானியதிக்கிலும் சுக்கிரோதயமானாற் பயிர் விருத்தியுண்டு.

ஜேஷ்டம், மாகம், மார்க்கசிரம், சிராவணம், கார்த்திகை இந்த மாதங்களிற் சுக்கிரோதயாஸ்தமனமானாலுஞ் சூரியசந்திர கிரகணங்களுண்டானாலும் மழையில்லை.

பரணி கார்த்திகை பூரம் இந்நாட்களிற் சுக்கிரனிருந்து சூரியனுக்குத் தெற்கே நடந்தாலும் திருவாதிரை, மகம், விசாகம், சுவாதி, பூசம் இந் நாட்களிற் சுக்கிரனிருந்து சூரியனுக்கு வடக்கே நடந்தாலும் மழை யுண்டு.

மகம் உத்திராட மிவற்றிற் சுக்கிரன் அஸ்தமித்தாலும் வக்கிரித்தாலும் மழையில்லை. அரசர்களுட் பரஸ்பரங் கலகமுண்டு.

உத்திரத்திரயம் பூசம் இந்நாளிற் புதோதயமானால் நல்ல மழையுண்டு. இதர நக்ஷத்திரகளில் உதயமானால் * ஈதி பாதையுண்டு.

சுவாதி, விசாகம், அநுடம் இவற்றுளொன்றிற் குருசஞ்சரிக்குங் காலத்திலும், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை இவற்றுளொன்றிற் சுக்கிரன் சஞ்சரிக்குங் காலத்திலும், குருவோடாவது

---

* ஈதி பாதையென்பது, பேதி அம்மை யிவற்றால் சனங்கள்சேதமாவதும், பக்ஷி கிளி பன்றி யிவற்றாற் பயிர் நாசமாவதுமாம்.

சுக்கிரனோடாவது சந்திரன் சம்பந்தப்படுங் காலத்திலும் விசேஷ மழையுண்டு. புதன் கூடினாற் சொற்ப மழையுண்டு. சனியாவது குஜனாவது வக்கிரமாயிருந்து சுக்கிரனோடாவது குருவோடாவது சேர்ந்தாற் புல் கிடைப்பதரிதாகிப் பசுக்கள் நாசமடையும்.

குஜன் சனி சுக்கிரன் இவர்கள் ஓரிராசியிலிருந்தால் மழையில்லை. இவர்களோடு குருசேர்ந்தால் மத்திம விருஷ்டியுண்டு.

குரு வக்கிரித்து உரோகிணி மத்தியபாகத்திலிருந்தால் மழையில்லை. சுவாதி விசாகம் அநுஷம் இம்மூன்றுநாளிற் குருவக்கிரித்திருந்தால் நல்ல மழையுண்டு.

அங்காரகன் வக்கிரமில்லாமலிருக்கும் பொழுது சனி வக்கிரமாயிருந்தால் ஒருமாதம் மழையில்லை.

மார்க்கசிரமாத கிருஷ்ணாஷ்டமியிற் சித்திரைநக்ஷத்திரமிருந்து நவமியிற் சுவாதியிருந்து அவ்விருதினங்களில் ஒருநாள மேகம்பரவி மின்னினால் மறுவருஷம் ஆஷாடமாதச் சித்திரை சுவாதி நக்ஷத்திரங்களில் அதிவிருஷ்டியுண்டு.

புஷ்யமாச சுத்த சதுர்த்தியில் தசதாதுக்கள் தோன்றினால் வருஷாகாலங்களில் நன்மழைபெய்து பயிர்ப்லிக்கும். தசதாதுக்களின் குறிகளுட்சிலகுறையின், பயிர்பலிதமுஞ் சிறிதுகுறைவாகும்

புஷ்யமாதப் பௌர்ணிமியிலும் அதனடுத்த துதியையிலும் மேகமில்லாது பனி மாத்திர மிருந்தால் ஆஷாடமாத அமாவாசியையில் நன்மழையுண்டு.

மாக சுத்த சப்தமியில் இரவும் பகலும் மேகம் பரவிக்கொண்டிருந்தாலும் அல்லது மேற்கே மின்னினாலும் அல்லது விசேஷக்காற்றடித்தாலும் வருஷாகாலத்தில் நல்ல மழையுண்டு.

மாகமாச பௌர்ணமியை நான்கு பாகமாக்கி முதற் பாகத்தில் வருஷதாதுக்கள் தோன்றாவிட்டால் ஆஷாட மாதத்தில் மழையில்லையென்றும், இரண்டாம் பாகத்திற் றோன்றாவிட்டால் சிராவணமாதத்திற் சுபிக்ஷமுண்டென்றும், மூன்றாம் பாகத்திற் றோன்றாவிட்டால் பாத்ரபதமாதத்திற் பயிர்கள் வெட்டுக்கிளிகளாற் சேதமடையுமென

வும், நாலாம் பாகத்திற் றேன்றுவிட்டாற் கிளிகளாற் பயிர்கள் நாச மடையுமெனவுமறிக.

சுக்கிரன் குரு குஜன் இம்மூவரும் ஓரிராசியிலிருந்தால் துர்ப் பிக்ஷயோகமென்ப. அப்போது மழையின்றிக் கடலும் வற்றும்.

விருச்சிகம் இடபம் சிம்மம் மீனம் தநுசு இந்த இராசிகளிற் குஜனாவது சனியாவது வக்கிரகர்களாயிருப்பின், துர்ப்பிக்ஷமுண்டு.

இடபம் கும்பம் தநுசு இவற்றின் மத்திய திரேகாணத்திற் சனி சஞ்சரிக்கும் காலத்தில் துர்ப்பிக்ஷமுண்டாகி மனிதர் முதலாயினோர் மரணமடைவர்.

சுக்கிரனுஞ் சந்திரனும் ஒருராசியிலாவது ஒருஅம்சத்திலாவது இருந்தால்அரசர்களுக்குட்கலகமாவது விசேஷமழையாவது உண்டு

சுக்கிரனுக்குப்பின் குஜனும் சனியுஞ்சென்றுற் பூமிநடுங்க மழை பொழியும்.

சுக்கிரனுக்கு ஏழிற்சந்திரனிருந்தாலும் அல்லது சுக்கிரனுக்கு 4, 7, 11-ற் சனியிருந்தாலும் மழையுண்டு.

சுக்கிரனுக்கு முன் புதன் நடந்தால் மேகம் கெடும்; மழைபெய் யாது.

சுக்கிரன் வக்கிரமாயிருந்து புதன் நேராக நடந்தால் நல்லமழை பெய்து வயல்களிற் சமுத்திரம் போல் நீர்வளம்பெருகும்.

சுக்கிரன் புதன் இவர்களிலொருவர் வக்கிரமாயும் மற்றொருவர் வக்கிரமில்லாமலு மிருந்தால் நன்மழை பொழிந்து தடாகங்களிலும் வயல்களிலும் ஜலம் நிரம்பியிருக்கும்.

புதனுஞ் சுக்கிரனுஞ் சமீபமாயிருந்தாலும் தீயவர் இருக்கு மிடத்தில் மழையில்லை. (நல்லோரிருக்குமிடத்தில் மழை பெய்யும்.)

சுக்கிரன, புதன், சந்திரன் இவர்களுக்குமுன் அங்காரகன் நடந் தால் அனுவிருஷ்டி யுண்டென்றும், புதன், சந்திரன், அங்காரகன் இவர்களுக்குமுன் சுக்கிரன்நடந்தால் மழையுண்டென்றும்,சந்திரன், சுக்கிரன், அங்காரகன் இவர்களுக்குமுன் புதன் நடந்தால் மழையில்

லையென்றும், அங்காரகன், புதன், சுக்கிரன் இவர்களுக்குமுன் சந்திரன் நடந்தால் மழையுண்டென்று மறிக.

குரு அதிசாரனும், சனி வக்கிரனுமிருக்குங் காலத்திற் பிரஜைகளுக்குத் துர்ப்பிக்ஷத்தினால் *ஹாஹாகாரமுண்டு.

---

* மனிதர்கள் ஓர் ஆபத்துக் காலத்தில் ஹிம்ஸை பொறாது வருந்தி பேரிரைச்சலிடுங் கூக்குரலை "ஹாஹாகாரம்" என வடநூலார் கூறுவர். இங்கே க்ஷாமகாலத்தில் தானியம் முதலிய உணவுப்பொருள்கள் கிடைக்காமல் கூக்குரலிடும் பெருங்கூச்சலையே ஹாஹாகாரம் எனக் கொள்க.

குருவிற்கு ஏழிற் சுக்கிரனிருந்தாலும் அல்லது சூரியனுக்கு ஏழிற் குரு இருந்தாலும் அனுவிருஷ்டி யுண்டென்ப.

ஜலராசியிற் சந்திரனிருந்து அவற்கு 5, 7, 9-ற் சனியுங் குஜனும் சேர்ந்திருந்தாலும் தனித்திருந்தாலும் நல்லமழையுண்டு.

சுக்கிரன், குஜன், புதன், சந்திரன் இவர்கள் ஜலராசிகளிலிருந்தால் அதிவிருஷ்டியுண்டென மநு சொல்லுகிறார்.

ஒரு வருஷத்திற் குரு மூன்று இராசிகளிற் சஞ்சரித்தால் †ஏழுகோடி பிரேதங்கள் விழும்.

---

† கற்பகாலத்தில் இவ்விதஞ் சம்பவிக்குமென பெரியார் கூறுப.

கார்த்திகை, மகம், அவிட்டம். அநுடம் இவைகளுக்குச் சமுத்திர நக்ஷத்திரங்களென்று பெயர்.

திருவாதிரை, புனர்பூசம்,ஹஸ்தம்,சித்திரை, பூராடம், உத்திராடம்,உத்திரட்டாதி, இரேவதி இவைகளைப் பர்வதநக்ஷத்திரமென்ப.

அஸ்வதி, மிருகசிரம், பூசம், உத்திரம், ஸ்வாதி, மூலம், திருவோணம். பூரட்டாதி இவைகளைக் குக்ஷிநக்ஷத்திரங்களென்ப.

உரோகிணி ஆயில்யம், பூரம், விசாகம், கேட்டை, அபிஜித்து, சதயம், பரணி இவைகளைத் தீர நக்ஷத்திரங்கள் அல்லது நதி நக்ஷத்திரங்கள் என்ப.

பருவத நக்ஷத்திரங்களில் அநாவிருஷ்டியும், குக்ஷி நக்ஷத்திரங்களில் அதிவிருஷ்டியும், நீரநக்ஷத்திரங்களிற் கண்டவிருஷ்டியும், சமுத்திர நக்ஷத்திரத்திற் சுவிருஷ்டியுமுண்டு.

சுக்கிரன், ஸ்வாதி, விசாகம், அனுஷம் இம்மூன்று நக்ஷத்திரங்களிற் கிழக்கிலும், மகமுதல் ஐந்துநக்ஷத்திரங்கள் வரைமேற்கிலும் பிரகாசித்துக்கொண்டிருந்தால் மழையில்லையென்றும்,ஸ்வாதிமுதல் மூன்று நக்ஷத்திரங்கள் வரை மேற்கிலும் மகமுதல் ஐந்து நக்ஷத்திரங்கள் வரை கிழக்கிலும் பிரகாசித்துக்கொண்டிருந்தால் மழையுண்டென்று மறிக.

ஸ்வாதித்திரயத்தில் மேற்கிலும் மகபஞ்சகத்திற் கிழக்கிலும் சுக்கிரன் பிரகாசித்துக்கொண்டிருக்கும்போது அவற்கு வக்கிரமுண்டானால் மழையில்லை.

ஆயில்யம், விசாகம், பூரம், பூராடம், பூரட்டாதி இந்நாட்களிற் குஜசஞ்சார காலமாயின் நல்ல மழையுண்டு.

ஸ்வாதி, மகம், கேட்டை, திருவாதிரை, உரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இந்த நாட்களிற் குஜசஞ்சாரமுண்டேல் சம்வர்த்தகாதி மேகங்கள் கெட்டு அனாவிருஷ்டியுண்டாகும்.

ஹஸ்தமுதல் ஆறுநாட்கள்வரை புதசஞ்சாரகாலமாயின், ஜனங்கட்குச் சுபிக்ஷமும் க்ஷேமமும் ஆரோக்கியமும் உண்டாய்ப் பசுக்களுக்குப் பீடையுண்டாகும்.

ஜேஷ்டமாத சுக்கிலபக்ஷத்தில் திருவாதிரை முதற் பத்துநக்ஷத்திரங்கள்வரை மழைபொழிந்தாற் பின் மழைபெய்யாது. மழை பொழியாவிடின், பின்பு நல்ல மழையுண்டு.

சூரியன் மிருகசிரத்திலிருக்கும்போது மழைபெய்தால் அது முதல் இரவி ஆயில்யத்திலிருக்கும்வரை நல்ல மழையுண்டு. மகத்திலிருக்கும்போது இடி இடித்தால் அதுமுதற் சித்திரையிலிருக்கும் வரை நல்ல மழையுண்டு. ஸ்வாதியிலிருக்கும்போது மின்னினால் அதுமுதல் மூலத்திலிருக்கும் வரை நல்லமழையுண்டு.

கார்த்திகை மாதத்தின் அமாவாசியையிற் சுவாதியாவது விசாகமாவது இருந்து அதனோடு ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன் இத்தினங்களி லொன்றிருந்தால், அப்போது காற்றுமழையுண்டாகி மனுஷர், பசுக்கள், மிருகங்க ளிவர்களுக்கு நாசமுண்டாகும்.

கார்த்திகை மாதத்தின் அமாவாசியையில் ஸ்வாதி விசாகங்களிற் செவ்வாய், புதன், வியாழன், ஞாயிறு, சனி இவ்வாரத்திலொன்று கூடினாற் பெருங்காற்றும் மழையுமுண்டாகி, விருக்ஷங்கள் சாய்ந்தும் மலைகள் சரிந்தும் கன்மழைத்தாரைகள் விழுந்தும் மனிதர் பசு பக்ஷி முதலானவர்கள் நாசமடைவார்கள்.

கார்த்திகை மாதத்தின் அமாவாசியை யன்று விசாக நக்ஷத்திரமும் ஞாயிற்றுக்கிழமையும் அதிகண்ட யோகமும் கூடினாற் பெருங்காற்றும் பெருமழையுமுண்டு.

சிங்கமாதம் முதற்றேதி மழைபெய்தால் அந்த மாதத்தில் மழையில்லை. கடகமாத முதற்றேதியில் மழைபெய்யாவிட்டால் அந்த மாதத்தில் மழையில்லை. கன்னியாமாசம் முதற்றேதி மழைபெய்தால் அந்த மாதத்தில் அதிவிருஷ்டியுண்டு. துலா மாதம் முதற்றேதி மழைபெய்தால அந்த மாதத்தில் நல்ல மழையுண்டு.

சூரியன் ஆதிரையிற் பிரவேசிக்கும்போது மழை பெய்தால் அதுமுதல் 60-நாளைக்கு மழையில்லை. ஆதிரையிற் பிரவேசிக்கும் போது பகற்காலமாயிருந்து மழைபெய்தால் தோஷமில்லை.

திருவாதிரையிற் சூரியன் பிரவேசிக்குங் காலத்தில் அவற்குக் கேந்திர திரிகோணத்திற் குரு சந்திரர் கூடியிருந்து, சுக்கிரன், குரு சந்திரர்களைப் பார்த்தால் அந்த வருஷத்தில் மேகங்கள் உண்டாகி நல்ல மழை பெய்யும்.

மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி இம்மாதங்களில் என்று அதிகக் குளிர்ச்சியாயும், அதிக உஷ்ணமாயும், ஆகாயம் நிர்மலமாயும், மந்த வாயு அல்லது அதிகக் காற்றாயும் இருக்கிறதோ அன்று தவளைகத்தினாலும் சூரிய மண்டல சந்திர மண்டலங்களில் மயிலிறகுச்சாய

லாயிருந்தாலும் அன்றுமுதல் மூன்று நாட்கள் வரைக்கும் நல்ல மழைபெய்யும்.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் முதல் யாமத்திற் பரிவேடமிருந்தால் லோகபீடை. இரண்டாம் யாமத்திற் சுவிருஷ்டி. மூன்றாம் யாமத்திற் சுபிக்ஷம். நான்காம் யாமத்திற் சுவிருஷ்டி. குருவையும் சந்திரனையும் சேர்த்துப் பரிவேட மிட்டிருந்தாற் பிராமணோத்தமர்கட்குப் பீடை. சனி, குஜன் இவர்கள்பால் அவ்விதமிருப்பிற் கலகம். புதனையுஞ் சந்திரனையும் சேர்த்துப் பரிவேட மிட்டிருந்தால் ஸ்திரீகளுக்கு நாசம். சுக்கிரனையுஞ் சந்திரனையும் சேர்த்துப் பரிவேடம் சுற்றியிருந்தால் எல்லாவற்றிற்கும் நாசமுண்டாகும்.

சித்திரை வைகாசிகளில் இரவியையாவது மதியையாவது பரிவேடமிட்டிருந்தால், அரசர்களுக்குள் யுத்தம் இராஜ்ஜியத்திற்குக் கெடுதி. ஆனி, ஆடிகளில் அவ்விதங் காணப்பெறுமேல் மழைக்குறைவுண்டாகும். மார்கழி, தை மாதங்களில் இருந்தாற் பசு நாசமுண்டு. மாசி பங்குனிகளிலிருந்தால் திருடர் பயம், அக்கினி பயமிவையுண்டு.

சூரியக்ஷேத்திரத்திற் கிரகங்கள்சேர்ந்தால் மழையில்லை. சந்திரக்ஷேத்திரத்திற் சேர்ந்தால் மழையுண்டு. செவ்வாய் க்ஷேத்திரத்திற் சேர்ந்தால் யுத்தமுண்டு. புதக்ஷேத்திரத்திற் சேர்ந்தாற் பெருங்காற்றினுற் சேதமுண்டாகும். குருக்ஷேத்திரத்திற் சேர்ந்தால் ஆரோக்கியமுண்டாகும். சுக்கிரக்ஷேத்திரத்திற் சேர்ந்தால் அதிக மழையுண்டு. சனிக்ஷேத்திரத்திற் சேர்ந்தால் வியாதியாற் பயமுண்டு.

இரண்டு கிரகங்கள் சேர்ந்தால் ஜனங்களுக்குக் கஷ்டம்.

3-கிரகங்கள் சேர்ந்தால் அரசர்களுக்குப் பீடை.

4-கிரகங்கள் சேர்ந்தாற் றேயத்திற்குப் பீடை.

5-கிரகங்கள் சேர்ந்தாற் றிரிலோகத்திற்கும் பீடை.

6-கிரகங்கள் சேர்ந்தால் ராச்சியத்துக்குப் பீடை.

7-கிரகங்கள் சேர்ந்தால் ராச்சியத்துக்குப் பீடை

*8-கிரகங்கள்சேர்ந்தால் ஜனசஞ்சாரமில்லாமல் நாசமுண்டாகும்

### ஜன்மராசிகளிற் கிரகங்கள் சேர்வதின் பலன்.

ஜன்ம லக்கினத்திலாவது ஜன்மராசியிலாவது கிரகங்கள் கூடியிருந்தால் அபமிருத்யு, 2-ல் தனநாசம், 3-ல் சம்பத்து, 4-ல் தனநாசம், 5-ல் அபமிருத்யு, 6-ல் சத்துருநாசம், 7-ல் பாக்கியஹானி, 8-ல் மிருத்யு, 9-ல் தருமநாசம், 10-ல் கர்மநாசம், 11-ல் இலாபம், 12-ல் மிருத்து. கெட்டபலம் ஆறுமாதங்களுக்கு முன்னே நடக்கும். (கெட்ட பலனென்பது இரண்டாமிடத்திற்குப் பின் சம்பவிக்கும்.) எந்த ராசியிற் கிரகஞ் சேர்கிறதோ அந்த ராசியில் அவ்விராசியதிபனும், அவ்விராசியினின்பதாமதிபனும் சேர்ந்திருப்பின் தோஷமில்லை.

ஜன்மராசியிலாவது ஜன்மலக்கினத்திலாவது கூடக்கிரகங்களிருந்தாலும் கிரகணம் பிடித்தாலும், ஜபஹோமங்கள் விதிப்படி செய்து தானங்கொடுக்க வேண்டியது.

சித்திரை, விசாகம், மிருகசிரம், இந்த நக்ஷத்திரங்களில் அங்காரகனிருந்தாலும் உதயமானாலும் நல்லமழை.

மழைக்காலத்திற் சுக்கிரனுக்கு 7-ற்சந்திரனிருந்து சுக்கிரற்குச் சுபர்களின் பார்வையிலிருந்தாலும், அல்லது அவற்கு 5, 7, 9-ற் சனி யிருந்தாலும் விசேஷ மழையுண்டு.

குரு அஸ்தமித்தாலும், சுக்கிரன் உதித்தாலும், அங்காரகன் அஸ்தமித்தாலும் மழைக்காலத்தில் மழையுண்டு. சந்திரற்கு 5, 7-ற் சனியாவது செவ்வாயாவது இருந்தாற் காற்றுமழையுமுண்டாகும்.

சனி சந்திரன் சுக்கிரன் மூவரும் ஓரிராசியிலிருந்தாற் கௌதமி நதிக்குத் தெற்கேயுள்ள தேசத்திலும், காவிரிக்கு வடக்கேயுள்ள தேசத்திலும் நல்லமழையுண்டு.

---

* கற்பாந்த காலத்தில் மட்டுஞ் சம்பவிக்குமன்றி மற்றைக்காலத்திலிவ்விதஞ் சம்பவித்தல் அரிது.

அஸ்வதி, பரணி யிவற்றிற் சூரியன் சஞ்சரிக்கையிற் சிறந்த மழைபெய்தால் தேசத்திற்குச் சுபிக்ஷம், க்ஷேமம் இவையுண்டு. கார்த்திகையில் இரவியிருக்கும்போது மழைபெய்தாற் பேதிய்ம்மை முதலிய ஈதிபாதைகள் உண்டாகும். உரோகிணி, மிருகசிரங்களி லிருக்கையில் மழை பெய்தாற் பயிர் விருத்தியுண்டு. திருவாதிரைப் பிரவேச காலத்தில் மழைபெய்தா லதுமுதல் $\frac{1}{2}$ மாதம் வரை மழையில்லை.

தூமகேது-குடை, கொடி, பாணம், வீணை, சாமரம், தோமரம் பாம்பு இவைபோல ஆகாசத்திற் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு இந்நான்கிடங்களிலுந் தோன்றினாற் றேசத்தில் க்ஷாமம் உண்டாகும். (சிவப்பு, புகை, கறுப்பு, வெண்மை, உதிரம், மஞ்சள் வர்ண முடையவைகளாகவுந் தூமகேதுக்கள் தோன்றும்)

இவற்றுள் வெண்மை நிறத்தோடு உதிரவர்ணங்கலந்துள்ள தூமகேதுத்தோன்றில் சுபிக்ஷமுண்டு. புகைவர்ணத்தோடு ரக்தவர்ண முள்ள தூமகேது தோன்றினல் துர்ப்பிக்ஷமுண்டு. கறுப்பாய்த் தோன்றினல் யுத்தமுண்டு.

சுவேதகேது கிழக்கிலும் மேற்கிலுந் தோன்றினாற் சுபிக்ஷம், சுவிருஷ்டி யிவையுண்டு. தெற்கிலும் வடக்கிலுந் தோன்றினாற் பசு நாசமுண்டு. வாயு திக்கிலும் ஆக்நேயத்திலுந் தோன்றினல் ஜனங்களுக்கு ரோக பீடையுண்டு. தென்மேற்கிலும் வடகிழக்கிலும் தோன்றினல் யுத்தமுண்டாகும். வால்நக்ஷத்திரம் தோன்றினல் யானை முதலிய பெரிய ஜெந்துக்களுக்கு நாசமுண்டு. இது தலைகீழாகத் தோன்றினல் அரசர்களுக்குக் கெடுதியுண்டு. குறுக்காகத் தோன்றினாற் பசு நாசமுண்டு.

அஸ்வதி, பரணி, விசாகம், கேட்டை இவை அங்காரக நக்ஷத்திரங்கள்.

திருவாதிரை, புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, உத்திரம் இவை புத நக்ஷத்திரங்கள்.

மூலம், பூராடம், உத்திரட்டாதி, இரேவதி இவை குரு நக்ஷத்திரங்கள்.

மிருகசீரிடம், உரோகிணி, கார்த்திகை, ஸ்வாதி, விசாகம் இவை சு [illegible] திரங்கள்.

மகம், பூரம் இவை சூரியநக்ஷத்திரங்கள்.

உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி இவை சனி நக்ஷத்திரங்கள்.

பூசம், ஆயில்யம் இவை சந்திரநக்ஷத்திரங்கள்.

முற்றும்.